8th November 1965]

திரு. வை. சங்கரன் : சட்ட சபை மெம்பர்கள் சம்பந்தப்பட்ட வரையிலாவது ஏஜ் குவாலிஃபிகேஷன், எஸ்.எஸ்.எல்.ஸி. குவாலி ஃபிகேஷன் இவைகளைத் தளர்த்தி அவர்களை ஹோம் கார்டில் சேர்த்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றி பரிசீலனை செய்து சொல்லுகிறேன்.

திருத்துறைப்பூண்டி கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கு

* 350 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி கோவாப்ப ரேடிவ் அர்பன் பாங்க் நிர்வாக ஊழல் குறித்து அண்மையில் அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) இது குறித்துப் புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : மகாசபைக் கூட்டம் நடத்தாமலேயே நிர்வாகம் நடத்துகிறார்கள் என்ற நிலையில், நிலம் அடமானம் வைத்து கடன் கேட்டு விண்ணப்பித்தும் கடன் கொடுக்கவில்லை என்ற புகார் வந்து, அந்தப் புகார் மேலேயே நான் நோட் எழுதி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறேன். அதை மறுபடியும் பரிசீலனை செய்து அந்தப் புகார்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப் படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஊழல் பற்றி கேட்டதற்கு ஊழல் இல்லை என்று பதில் சொன்னேன். ஒரு சில புகார்கள் வந்தன, அவைகளைப்பற்றி ரிஜிஸ்டிரார் அவர்கள் பரிசீலனை செய்து என்ன செய்யவேண்டும் என்று சில குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ மகா சபைக் கூட்டம் நடக்கவில்லை என்று கூறுகிறார்கள். மெம்பர் களுடைய 'பீரியட்' 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்தான் முடிவடைகிறது. கனம் அங்கத்தினர் சொல்லுவது, ஏதோ அவர்கள் 'பீரியட்' முடிந்தும் அவர்கள் தலையிடுகிறார்கள் என்று புகார் சொல்லுகிறார்கள். 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவர்கள் பதவி காலம் முடிவடைகிறது.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

* 351 கேள்வி.—**திரு. கோ. சி. மணி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில் தஞ்சை மாவட்டக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கத்திற்கு (Thanjavur district Co-operative Marketing Society) லாப நஷ்டம் எவ்வளவு ?